3 பேருந்துகள் அல்ல, 4 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தனியார் பேருந்துகள் 5 அந்த வழித்தடத்திலே இயக்கப்பட்டு வருகின்றன. இன்னும் கூடுதலாகப் பேருந்து வசதி தேவை என்று கருதினால், நிதி நிலைமைக்கேற்ப, பயணிகளுடைய அடர்வுகளைக் கணக்கெடுத்து, தேவைக்கேற்ப இதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 207, திரு. அ. நடராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

207—

சிற்றுந்து இயக்குதல்

***11016—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மேலப்பலையூர் ஊராட்சி, மேலப்பலையூர் கிராமத்திற்குச் சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மேலப்பலையூர் ஊராட்சி, மேலப்பலையூர் கிராமத்திற்குச் சிற்றுந்து இயக்க அனுமதி கேட்டு யாரேனும் மனுச் செய்யும் பட்சத்தில் விதிமுறைகளுக்குட்பட்டுப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இரண்டாண்டு கால ஆட்சியில் எடுக்கப்பட்ட சிக்கன நடவடிக்கையாலும், சீர்மிகு நிர்வாகத் திறத்தாலும் நட்டத்தில் மூழ்கிய போக்குவரத்துத் துறை மீட்கப்பட்டுள்ளது என்பதைத் தமிழக மக்கள் பலரும் பாராட்டுகின்ற இந்த வேளையில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிற்றுந்து இல்லை என்றாலும், எனது தொகுதி குடவாசல் ஒன்றியத்தில் உள்ள மேலப்பலையூர் கிராமத்திற்கும்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2003 ஏப்ரல் 8]

கும்பகோணத்திற்கும் இடையே ஓடிய அரசு நகரப் பேருந்தை -- நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது -- பொதுமக்கள், மாணவர்கள் நலன் கருதி, மீண்டும் இயக்க அரசு முன்வருமா என்பதை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 208, திரு. என். ரெங்கநாதன், மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

208—

தொழிற்பேட்டை

***1882—திரு. என். ரெங்கநாதன்:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, பூம்புகார்-மேலையூரில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் பணிகள் துவங்கப்படுமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, மேலையூரில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

திரு. என். ரெங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991-1996 ஆம் ஆண்டுகளில் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றிருந்தபோது பூம்புகார் தொகுதி, பூம்புகார்-மேலையூரில் சிப்காட், அதாவது தொழிற்பேட்டை அமைக்க இடம்